(ஊ) செங்கல்பட்டு-மாமல்லபுரம் சாலையில் இரயில்வே கேட் எண் 54-ல் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், திரு. கி. ஆறுமுகம், சொல்லுங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே, செங்கல்பட்டிலிருந்து மாமல்லபுரம் சாலையில் செல்கிற வழியில் இரயில்வே கேட் எண் 54-ல் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பாக இரயில்வே துறை அனுமதி கொடுத்தும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நம்முடைய அரசு அங்கே பாலம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தும், அங்கே இருக்கிற நிலத்தை, ஒரு சிறிய இடமான நிலத்தை எடுப்பதற்கு, நில ஆர்ஜிதம் செய்து அரசுக்கு அனுப்பியும், அரசாணை இதுவரை வெளியிடப்படவில்லை. எனவே, இதுவரை அந்த மேம்பாலம் கட்டுவதற்கான பணி நடைபெறவில்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உடனடியாக அதற்கான அனுமதி வழங்கப்படுமா எனத் தங்கள்மூலம் கேட்டு, அமைகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. கி. ஆறுமுகம், சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நெடுஞ்சாலைத் துறையினுடைய அமைச்சர் அவர்கள்தான் அதற்கான அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. வருவாய்த் துறையிலே கொடுத்ததாகத் தெரிகிறது. எனவே, நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தை அளிப்பார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு, அமைகிறேன்.

(உ) வேலூர் மாவட்டம், ஜவ்வாதுமலை, காட்டு யானைகள் தாக்கியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரமாக என்னுடைய வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாதுமலையில் 10 யானைகள் காட்டிலிருந்து வெளிவந்து